**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் புதன்கிழமை**

**இ.ம.எண். 4/2025**

**இன்**

**அ.வ.எண்.80/2022**

ஈஸ்வரி --- மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பொன்னாத்தாள்
2. பவுனாத்தாள்
3. கருப்புச்சாமி
4. விக்னேஷ்குமார்
5. சர்குணம்
6. பிரேமா
7. குமாரசாமி
8. ராஜேந்திரன்
9. சிவக்குமார்
10. பெருமாள்சாமி
11. சிவராஜ்
12. தங்கவேல்
13. ஹேமலதா
14. மகுடீஸ்வரன் ---எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 18.03.2025 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் S. அன்வர்தீன் மற்றும் N. திருமூர்த்தி ஆகியோர் முன்னிலையாகியும், 1, 3 முதல் 7, 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள்.1, 3 முதல் 7, 10 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜராகததால் ஒருதரப்பாக இருந்தும், 2–ம் எதிர்மனுதாரர்/2–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் V.இராஜமாணிக்கம் மற்றும் V. பச்சைமுத்து ஆகியோர் முன்னிலையாகியும், பின்பு எதிர்உரை இல்லை எனத் தெரிவித்தும், 8, 9 எதிர்மனுதாரர்கள்/8, 9 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P. சந்திரசேகரன் மற்றும்

K.காளிமுத்து ஆகியோர் முன்னிலையாகியும், பின்பு எதிர்உரை இல்லை எனத் தெரிவித்தும், 14–ம் எதிர்மனுதாரர்/14–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S. மகுடீஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுவில் கண்டுள்ள விபரப்படி திருத்தம் செய்துகொள்ள உத்தரவிடக்கோரி சி.பி.சி. ஆர்டர் 6 ரூல் 17 மற்றும் பிரிவு 151–ன்படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கை பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். 1 முதல் 4 இலக்கச் சொத்துக்களை சொத்து விபரமாகக் காட்டி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்யும்போது தனக்கு தெரிந்த சொத்துக்களை சொத்து விபரமாக வாதி தெரிவித்துள்ளார். ஒரு மாத காலம் முன்பு வழக்குச் சொத்துக்கள் சம்மந்தமான ஆவணங்களை பரிசீலித்தபோது, ஏதேச்சையாக 3–ம் பிரதிவாதி கருப்புச்சாமி பெயரில் உள்ள கிரைய ஆவணம் பற்றி தெரியவந்தது. அதனைப் பரிசீலித்தபோது, கருப்புச்சாமி வழக்குச் சொத்தில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு அக்கரைப்பட்டி கிராமத்தில் 10.10.1991 அன்று ஒரு சொத்தை கிரையம் பெற்றுள்ளார். அதேபோல் கோரிக்கடவு கிராமத்தில் 10.04.2012 அன்று ஒரு சொத்தை கிரையம் பெற்றுள்ளார். பூர்வீகச் சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தில் கிரையம் பெற்றுள்ளதால், அவற்றையும் பூர்வீகச் சொத்துக்களாகவே கருதவேண்டும். எனவே மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களை கூடுதல் சொத்து விபரங்களாக சேர்க்கவேண்டும்.

**3. 14–ம் எதிர்மனுதாரர்/14–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு :–**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. மனுதாரர் உரிய Due Diligence உடன் இம்மனுவை தாக்கல் செய்யவில்லை. அசல் வழக்கை வாதி 2022 ஆம் வருடம் தாக்கல்

செய்துவிட்டு, தற்போது வாதி தரப்பு வாதங்களுக்காக வழக்கானது 07.01.2025, 20.01.2025, 27.01.2025, 04.02.2025 ஆகிய தேதிகளில் No further adjournment என வாய்ப்புகள் வழங்கப்பட்ட நிலையில், வழக்கை முடிக்கக்கூடாது என்ற எண்ணத்துடன் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து குறுக்கு விசாரணை முடிந்த பிறகு கருப்புச்சாமியின் கிரையச் சொத்தை 5 மற்றும் 6–வது சொத்துக்களாக சேர்க்கவேண்டுமெனக் கோரியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. வாதி கூறியுள்ள கிரைய ஆவணங்களான 709/1991 மற்றும் 987/2012 ஆகிய இரண்டு ஆவணங்களும் ஏறத்தாழ 34 ஆண்டுகளுக்கு முன்பாகவும் மற்றும் 13 ஆண்டுகளுக்கு முன்பாகவும் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களாகும். வழக்கு மூலத்தையே மாற்றும் எண்ணத்துடன் இவ்வாறான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியின் வழக்கின் செல்லும் தன்மை குறித்து அனைத்து ஆட்சேபணைகளையும் பிரதிவாதி முன்வைத்த பின்னர் எதிர்வழக்குரையை நீர்த்துப்போகச் செய்யும் எண்ணத்துடன் இவ்வாறான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு தள்ளுபடியாக வேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு:–**

6.1. மனு, எதிர்உரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுதாரர்/வாதியானவர் அசல் வழக்கை தாக்கல் செய்யும்போது தனக்கு தெரிந்த சொத்துக்களை சொத்து விபரமாகக் குறிப்பிட்டதாகவும், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வழக்குச் சொத்துக்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலித்தபோது 3–ம் பிரதிவாதி கருப்புச்சாமி பெயரில் 10.10.1991 மற்றும் 19.04.2012 ஆகிய தேதிகளில் சொத்துக்களை கருப்புச்சாமி பெயரில் பூர்வீகச் சொத்திலிருந்து வந்த வருமானத்தைக் கொண்டு கிரையம் பெற்றுள்ளது தெரியவந்துள்ளது என்றும், மேற்படி சொத்துக்களை 5 மற்றும் 6 இலக்க சொத்துக்களாக வழக்குரையில் சேர்த்து உத்தரவிடவேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

6.2. 14–ம் எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானது இருதரப்பு சாட்சியங்களும், 16.12.2024 அன்று முடிக்கப்பட்ட பின்னர், 07.01.2025, 20.01.2025, 27.01.2025, 04.02.2025 ஆகிய தேதிகளில் No further adjournment என வாய்ப்புகள் வழங்கப்பட்ட நிலையில், வழக்கை முடிக்கக்கூடாது என்ற எண்ணத்துடன் வேண்டுமென்றே இவ்வாறான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் Basavaraj --- Vs --- Indira என்ற வழக்கில், வழக்கின் விசாரணை ஆரம்பித்த பிறகு தாக்கல் செய்யப்படும் திருத்தல் மனுக்களை அனுமதிக்கக்கூடாது எனத் தெரிவித்துள்ளதாகவும் கூறி வாதிடப்பட்டது.

6.3. வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்ததில், 16.12.2024 அன்று இருதரப்பு சாட்சியங்களும் முடிக்கப்பட்டு, வழக்கானது இரண்டு மாதகாலமாக வாதங்களுக்காக இருந்த நிலையில், இவ்வாறான மனு வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.4. வாதியின் வழக்குரையைப் பரிசீலித்ததில், சின்னச்சாமிகவுண்டருக்கு 2 மனைவிகள் என்றும், மூத்த மனைவிக்கு வாதியின் தாயார் காளியாத்தாளும், 1, 2 பிரதிவாதிகளும் மகள்கள் என்றும், சின்னச்சாமிகவுண்டர் 2–வது மனைவி முத்தம்மாளுக்கு 3–ம் பிரதிவாதி ஒரே மகன் என்றும், 7–ம் பிரதிவாதி வாதியின் தகப்பனார் என்றும், 8, 9 பிரதிவாதிகள் வாதியின் உடன்பிறந்த சகோதரர்கள் என்றும் வழக்கில் சொல்லப்பட்டுள்ளது. சின்னச்சாமிகவுண்டரும், அவரது மகன் 3–ம் பிரதிவாதியும் வழக்குச் சொத்துக்களை அனுபவித்து வந்ததாகவும், வாதியின் தாயார் காளியாத்தாள் தனக்கு சொத்துக்களில் பாகம் பிரித்துக்கொடுக்கும்படி கேட்டபோது, அவர்களது பங்கு பாத்தியத்தை மோசடி செய்யும் எண்ணத்துடன் 3–ம் பிரதிவாதி பதிவு செய்யப்படாத ஒரு ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளதாகத் தெரியவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6.5. அதாவது வாதியின் வழக்கு என்னவென்றால், மேற்படி பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதும், வழக்குச் சொத்துக்களில் வாதிக்கு 1/16 பங்கு பாத்தியம் உள்ளது என்பதும், 3–ம் பிரதிவாதியும், அவரது மகன்களும் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் மற்றும் அதனடிப்படையில் ஏற்பட்ட பல கிரைய ஆவணங்கள் செல்லாதது என்பதேயாகும். இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்களை பின்னிட்டு கிரையம் பெற்றுள்ள 14–ம்

பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்து, வழக்கை நடத்தி வருகிறார். 14-ம் பிரதிவாதி 1-ம் அயிட்டச் சொத்தை 2020 ஆம் வருடம் கிரையம் பெற்று அபிவிருத்திகள் செய்து அனுபவித்து வருவதாகத் தெரிவித்து அவரிடம் பணம் பறிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகத் தெரிவித்து எதிர்வாதம் செய்துள்ளார்.

6.6. இவ்வாறான சூழலில் பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ள வாதி தற்போது அசல் வழக்கின் அடிப்படை சங்கதிகளை மாற்றுவதுபோல் தற்போது தான் 3-ம் பிரதிவாதி பெற்றுள்ள கிரையங்கள் குறித்து தனக்கு தெரியும் என்றும், மேற்படி கிரையங்கள் பூர்வீகச் சொத்திலிருந்து வந்த வருமானத்தில் பெற்ற கிரையங்கள் என்றும் தெரிவித்து, மேலும் இரண்டு சொத்துக்களை வழக்கில் சேர்க்கவேண்டுமெனக் கோரி மனு தாக்கல் செய்துள்ளார். அவரது மனுவானது வழக்கின் அடிப்படையை மாற்றும் எண்ணத்துடன் அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக இருதரப்பு விசாரணையும் முடிக்கப்பட்ட பின்னர், பூர்வீகச் சொத்து அல்லாமல் 3-ம் பிரதிவாதியின் பெயருக்கு தனிப்பட்டு கிரையம் ஏற்பட்டதாகச் சொல்லப்படும் சொத்துக்களை பூர்வீகச் சொத்துக்கள் என்று கூறி புதிதாக சொத்து விபரங்களைச் சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கோரும் திருத்தலானது அசல் வழக்கின் அடிப்படையை மாற்றும் தன்மை கொண்டது. இருதரப்பு விசாரணையும் முடிக்கப்பட்டு, வழக்கானது வாதங்களுக்காக நிலுவையில் இருக்கும்போது காலம் கடத்தும் எண்ணத்துடன் இவ்வாறான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.03.27 18:06:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.

**மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை**

**எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை**

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.03.27 18:06:24 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
இ.ம.எண்.4/2025
இன்
அ.வ.எண்.80/2022
______________ உத்தரவு
நாள் : 26.03.2025